செ.வெ.எண்:12 நாள்: 09.06.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா நோய்த்தொற்று தடுப்பு பணிகள் குறித்து மண்டல அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகாராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளபடும் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு பணிகள் குறித்து மண்டல அலுவலர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகாராஜ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,**

நாமக்கல் மாவட்டத்தில் கெரோனா நோயாளிகளுக்காக கூடுதல் படுக்கைகள், ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், சித்த மருத்துவ கொரோனா சிறப்பு சிகிச்சை மையம், கூடுதல் படுக்கைகளுக்காக தனியார் மற்றும் அரசு கல்லூரிகளில் கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தன்னார்வலர்கள் மூலம் வீடு, வீடாக சென்று கோவிட் தொற்று அறிகுறிகளான சளி, இருமல், காய்ச்சல், உடல்வலி உள்ள நபர்கள் குறித்து கேட்டும், பல்ஸ் ஆக்ஸிமீட்டர் மூலம் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ளவர்கள் கண்டறியப்பட்டும் மருத்துவ சிகிச்சைக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். கொரோனா நோய்த்தொற்றாளர்களை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்களுக்கு களப்பணியில் ஏற்படும் இடையுறுகளை களைந்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மண்டல அலுவலர்கள் செய்திடவேண்டும்.

கட்டுப்பாடு மண்டலங்களில் வீடுகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதை உறுதி செய்திட வேண்டும்.

பல்சாக்சி மீட்டர் கொண்டு ஆக்சிஜன் அளவு 94க்கு குறைவாக உள்ள நபர்கள் பட்டியலைத் சுகாதாரத் துறைக்கு அனுப்பி பரிசோதனை செய்ய வேண்டும்.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் சுகாதாரத்துறை அறிவுரையின்படி வெளியில் சென்றால் நோய் பரவும் அபாயம் உள்ளதால் அவர்களை வீட்டிலேயே தனிமைப் படுத்திக் கொள்வதை தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

நோய் தொற்று முழுமையாக குறையும் வரை வீடு வீடாக கணக்கெடுக்கும் பணி. கட்டுப்பாட்டு பகுதியில் கண்காணித்தல் ஆகியவற்றில் முழுமையாக கவனம் செலுத்தி நோய்த் தொற்றைக் குறைக்க மண்டல அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கோ.மலர்விழி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.க.கிருஷ்ணாமூர்த்தி (பொறுப்பு) மற்றும் மண்டல அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**